ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2045/39 – 2017 නොවැම්බර් මස 16 වැනි බ්‍රහස්පතින්දා – 2017.11.16

*2045/39 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**(175 ஆம் அத்தியாயமான) புனித யாத்திரைக் கட்டளைச் சட்டம்**

*சதாதுக கரண்டுவ உடன் ஸ்ரீ சுமன சமன் சிலையை ஸ்ரீ பாதமலை வரை (காவிச் செல்வதற்கு) எடுத்துச் செல்வதற்கான ஊர்வலம் 2017-2018*

உலகம் முழுவதிலுமான பௌத்த தத்துவார்த்தம் 8 வருடங்களுக்குப் பின்னர் சப்ரகமுவ பரிபாலனத்தில் உள்ள சுமன தேவ பேரரசரின் அழைப்பின் மீது ஸ்ரீ பாத மலை உச்சியில் ஸ்ரீ பாத இலட்சினையை பதித்து இலங்கையை பரிசுத்தப்படுத்துவதாகுக. அவ்விடத்திலிருந்து ஸ்ரீ பாத மலை உலக வணக்கஸ்தலமாகுக. அப்பொழுதிலிருந்து இராசராச மாவரசரினால் புனித பாத யாத்திரை நடைபெறும்.

சப்ரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி திசையில் நவதுன் கோரளையில் பெல்மதுல்ல குட்டபிட்டிய விகாரைக் கிராமத்தில் அமைந்துள்ள கல்பொத்தாவெல ஸ்ரீ பாத ரஜ மகா விகாரையில் அகால பருவத்தில் சுமன சமன் தேவச்சிலையை இருப்புச் செய்து புத்த பூசைகள் நடத்தும் தேவமான்யமாக அமைக்கப்பட்டுள்ளது.

1. 2017 ஆம் ஆண்டு உன்துவப் மாதம் பஸலொஸ்வக போயா தினத்திற்கு முன்னர் சதாதுக கரண்டு உடன் சமன்தேவச் சிலையை கல்பொத்தாவில ஸ்ரீ பாத ரஜ மகா விகாரையில் இருந்து ஸ்ரீ பாத மலை உச்சிக்கு காவிச் செல்லும் ஊர்வல உற்சவம்.

* 2017.12.01 ஆந் திகதி பி. ப. 5.00 மணியில் இருந்து 2017.12.02 ஆந் திகதி மு. ப. 5.02 மணிவரை தேவச் சிலையை நிராவரணம் பண்ணப்பட்டு பக்தர்களின் புத்த பூஜை வழிபாடுகளைச் செய்தல்.
* 2017.12.02 ஸ்ரீ பாத ரஜ மகா விகாரையில் இருந்து அதிகாலை ஊர்வலம் ஆரம்பிக்கப்படும்.

(1) அதிகாலை 5.02 மணிக்கு ஸ்ரீ பாத ரஜ மகா விகாரையில் இருந்து ஹட்டன் வழியாக நல்லதண்ணியில் அமைந்துள்ள உத்தியோகப்பூர்வ ஆராமய வரை வாகன ஊர்வலம் நடத்துதல்.

(2) அதிகாலை 6.01 இலிருந்து ஸ்ரீ பாத ரஜ மகா விகாரையில் இருந்து இரத்தினபுரி வழியாக பலாபத்தல விகாரை வரைக்கும் வாகன ஊர்வலம் நடத்துதல்.

1A - G26608 - 17 (2017/11)

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(3) அதிகாலை 7.54 மணிக்கு ஸ்ரீ பாத ரஜ மகா விகாரையில் இருந்து பலாங்கொடை வீதி வழியாக நல்லதண்ணியில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ ஆராமயவரை வாகன ஊர்வலம் நடத்துதல்.

அதன் பின்னர் ரஜ மாவத்தை வழியாக ஹட்டன் வீதி வழியாக ஸ்ரீ பாத மலுவ வரை சதாதுக கரண்டு உடன் தேவச்சிலையை ஸ்ரீ பாத மலை வரை காவிச் சென்று ஊர்வல உற்சவத்தை முடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

* ஸ்ரீ பாத பொறுப்பதிகாரியினால் பெயர் குறிப்பிடப்படுகின்ற வாகனத்திற்கு ஊர்வலத்தில் முக்கியத்துவம் அளிக்கப்படுவதோடு, வரிசைப்படுத்தலுக்கு இடைஞ்சல் இல்லாது, ஊர்வலத்தில் பங்கேற்கின்ற ஏனைய வாகனங்கள் அதன் பின்னர் பயணம் செய்ய வேண்டும்.

2. விகாரைத் தளத்தில் வியாபாரம் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. பிரதான வீதிகளில், பிரதான வீதிகளில் இருந்து ஸ்ரீ பாத விகாரை வரை இடை வீதிகளில் வியாபாரம் செய்வது மற்றும் தன்சல் நடத்துவது, பக்தர்களுக்கும் ஊர்வலத்திற்கும் இடைஞ்சல் ஏற்படுத்தப்படாது செயல்பட வேண்டும்.

3. பெல்மதுல்ல நகரத்தில் இருந்து ஸ்ரீ பாத பூமி வரை நன்கொடைகள் அறவிடுவது உதவிப் பணங்களை சேகரிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

4. பிரதான வீதியில் இருந்து ஸ்ரீ பாத பூமி வரை வீதியில் ஊர்வலம் மற்றும் பக்தர்களுக்கு இடைஞ்சல் ஏற்படும் வகையில் தனியார் வாகனங்களை நிறுத்தி வைப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

5. விகாரைப் பூமியில், சுற்றிவரவுள்ள வீதிகளில் விளக்கு மற்றும் மேலதிக விளக்குகளைப் பொருத்துவது இலங்கை மின்சார சபைக்கும் மற்றும் பெல்மதுல்ல பிரதேச சபைக்கும் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

6. ஊர்வல உற்சவத்திற்கு முன்னர் மற்றும் மிருக சுகாதார அலுவல்கள், சுகாதாரப் பாதுகாப்பு அலுவல்கள் மற்றும் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு பெல்மதுல்ல பிரதேச சபைக்கு மற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயத்திற்கும் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

7. பக்தர்களுக்கு தேவையான குடிநீர், மேலதிக தண்ணீர்த்தாங்கிகள் மூலம் நீர் வழங்குவதற்கு நீர் வழங்கும் சபையின் பிரதேசக் காரியாலயத்திற்கு பாரப்படுத்தப்பட்டுள்ளது.

8. சகல பாதுகாப்பு அலுவல்களும், ஊர்வலத்திற்கு மற்றும் பக்தர்களுக்கு இடைஞ்சலில்லாது வீதிகளில் வாகனங்களை ஒழுங்குப்படுத்துவது பாதுகாப்புப் பிரிவிற்கும் மற்றும் பொலிசுக்கும் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

9. ஸ்ரீ பாதத் தளத்தில் 06 மாத காலம் புனித வணக்கங்கள் மற்றும் புத்த பூஜைகள் நடாத்தப்பட்டு எதிர்வருகின்ற வெசாக் போயா தினத்திற்கு பின்னர் கல்பொத்தாவெல ரஜ மகா விகாரையில் மகா தேவ மாளிகையில் தரித்து வைக்கப்பட்டு புத்த பூஜைகள் நடாத்தப்படும். அத்தினத்திற்கு உரிய விடயம் 8 இற்கு உரிய கட்டளைக்கு இணங்கச் செல்லுபடியாகும்.

எச். சீ. என். தர்மபால,
பிரதேச செயலாளர்,
பெல்மதுல்ல.

11-1421